<u>4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை</u>

சாட்சியின் சாட்சியம் **திரு.M.நம்பிராஜன்,பி.ஏ.,பி.எல்.,** 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**அ.வ.எண். 48/2017** **நாள்: 11.11.2025** **வா.சா.3**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : அமல்ராஜ் | தொழில் | : ஆவண எழுத்தர் |
| த/பெ | : டேனியல் | கிராமம் | : உடுமலைபேட்டை |
| வயது | : 50 | தாலுகா | : உடுமலைபேட்டை |
| | | மாவட்டம் | : திருப்பூர் |

**<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, முதல் விசாரணை -</u>**

நான் இந்த வழக்கில் வாதிகள் தரப்பு 3வது சாட்சி ஆவேன். நான் 1991 ம் ஆண்டிலிருந்து பத்திரம் எழுதும் தொழில் செய்து வருகிறேன். இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்தது. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தை நான் தான் பத்திர எழுத்தர் என்ற முறையில் தயாரித்தேன். மேற்படி பத்திரம் அடமான பத்திரம். மேற்படி அடமான பத்திரத்தை K.R.தினேஷ் என்பவர் ராஜாமணி மற்றும் கண்ணப்பன் ஆகியோருக்காக எழுதிகொடுத்துள்ளார். மேற்படி ஆவணம் வா.சா.ஆ.1 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

M NAMBIRAJAN
Digitally signed by M NAMBIRAJAN
Date: 2025.11.11 14:34:24 +0530

4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.